MAY 2023 **P/ID 35317/PTL2G**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. நாலடியாரை இயற்றியோர் யாவர்?

2. உண்டியின் அறுசுவை எவை?

3. மம்மர் - பொருள் சுட்டுக.

4. எவ்வம் என்பது யாது?

5. பொறை, பொறாமை ஆகியவற்றை உறழ்க.

6. உணா - சொற்பொருள் தருக.

7. சூழ்தல் என்றால் என்ன?

8. கன்றலும் முனிதலும் ஒன்றா? வேறா?

9. இசை - பொருள் சுட்டுக.

10. துச்சில் எனப்படுவது யாது?

11. ஆத்திசூடி - சொற்பொருள் தருக.

12. ஐயமிட்டு உண் - பொருள் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையளிக்க.

13. அறம் - சொற்பொருள் விளக்குக.

14. 'வழுக்கிக் கழிதலே நன்று' என்று நாலடியார் கூறுவது யாது?

15. முன்றுரை அரையனார் இளைஞர் மேம்பாட்டுக்குக் கூறும் அறவுரைகள் யாவை?

16. சிற்றினம் சேராமையின் தேவையை வலியுறுத்துக.

17. 'கேளிரான் ஆய பயனைக் கெட்டு அறிப' என்று நான்மணிக்கடிகை நவில்வது யாது?

18. இனியவை நாற்பதில் கூறப்படும் கருத்துக்களுள் முதன்மையானவையாக நீர் கருதுவன யாவை?

19. 'இட்டார் பெரியோர்' என்று நல்வழி கூறுவதை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையழுதுக.

20. 'கரவாது அறம் செய்ம்மின்' என்று நாலடியார் நவில்வதை விளக்குக.

21. 'பொருள், துன்பத்தின் இருப்பிடம்' என்று நாலடியார் கூறுவது யாது?

22. அறநூற் கருத்துக்களை நிலைபேறுடைய மானுட மதிப்புகளாக ஏற்கலாமா? ஆராய்க.

23. ஊரொடு ஒத்து வாழவேண்டியதன் தேவையை வலியுறுத்துக.

24. அவ்வையார் வகுத்துரைக்கும் அறநெறிகளை வகை தொகைப்படுத்துக.

———————